# 3 இறைபடைப்பின் சிகரம் - மனிதன்










இந்த அதிசயம் மிகுந்த உலகத்தை கடவுள் படைத்தார் என்பதை கடந்த இரு பாடங்களிலும் நாம் அறிந்துகொண்டோம். வான் உலகையும் மண் உலகையும், தாவரங்கள், பழமரங்கள், பூஞ்செடிகொடி, மிருகங்கள், பறவைகள் போன்ற அனைத்தும் கடவுள் எமக்கு கொடுத்த கொடை களாகும். நீர்வீழ்ச்சிகள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள் போன்றவற்றையும் படைப்பின் வெவ்வேறு வர்ணங்களையும், நறுமணங்களையும், சுவை களையும் நாம் பார்த்துணரும் போது படைப்பாளராகிய கடவுளின் மேன்மை நமக்கு நன்கு புலப்படுகின்றது.

திருவிவிலியத்திற்கு அமைய படைக்கப்பட்ட அனைத்துக்கும் சிகரமாக மனிதனை கடவுள் நியமித்துள்ளார். அதாவது கடவுளின் பார்வையில் மனிதர்கள் பெறுமதிமிக்கவர்கள். மனிதர்கள் படைக்கப்பட்டதைப் பற்றி திருவிவிலியம் பின்வருமாறு கூறுகின்றது.

**‘‘கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்.**
**கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும்**
**பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்’’.**

தொடக்க நூல் 1: 27-28

ஆணையும் பெண்ணையும் இறைவன் தமது சாயலில் படைத்திருக்கின்றபடியால், மனிதர் படைப்புக்கள் எல்லாவற்றிலும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளனர். ஆண்களும் பெண்களும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டிருக்கின்றபடியால் அவர்கள் சம இடத்தில் இருக்கின்றார்கள். இறைவனுடைய சாயல் மனிதரில் காணப்படுவதால், மனித தன்மையின் மேன்மையை நாம் அறிந்து, மனிதத்துவத்தை மேலும் வளர்க்கும் விதத்தில் வாழவேண்டும்.

**சிறுவர்களாகிய நாம் மனிதர் பெற்றிருக்கும்**
**இம்மேன்மையையும் பெறுமதியையும் அறிந்துகொள்வோம்!**
**அதனை வளர்த்திடுவோம்! அதனைப் பாதுகாப்போம்!**




மேலே காட்டப்பட்டுள்ள படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்கள் மனித வாழ்வுக்கு மிகவும் அவசியமானவை. வளர்ந்தவர்களில் மாத்திரமல்ல, சிறியவர்களிலும் அந்த தன்மைகள் காணப்படுகின்றன. அனைத்து தன்மைகளும் ஒரே அளவில் காணப்படாவிட்டாலும் கூட, உங்கள் ஒவ்வொருவரிலும் அவை வெவ்வேறு அளவில் காணப்படும் என்பது

நிச்சயமாகும். நல்ல ஒரு பிள்ளையாக இவ்வுலகில் வாழ்ந்த இயேசுவில் இத்தன்மைகள் அதிகளவில் காணப்பட்டன. கிறிஸ்தவ பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் இத்தன்மைகள் வளர வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கின்றார்.

உங்களுடைய வீடுகளில், பாடசாலையில் அல்லது சமூகத்தில் மற்றவர்களுடன் நீங்கள் தொடர்புகொள்ளும் போது அன்பு, பொறுமை, ஒற்றுமை, கருணை, பகிர்வு, சகோதரத்துவம் இரக்கம் போன்ற உயர்ந்த தன்மைகளை வளர்க்க முற்பட வேண்டும். அதற்காக கடவுளின் அருளை நீங்கள் கேட்க வேண்டும்.

உங்களுக்கு இந்த வாழ்வைத் தந்தவர் இந்த உலகத்தை படைத்த கடவுள். இன்று சிறுபிள்ளைகளாக இருக்கும் நீங்கள் வளர்ந்து பெரிய சேவையை செய்ய வேண்டும் என்று கடவுள் உங்களிடம் எதிர்பார்க்கிறார். எனவே சிறுவயது முதல் இயேசுவை அறிந்து, உங்களுடைய வாழ்வை இயேசு எதிர்பார்க்கும் வாழ்வாக மாற்றி அமைத்துக்கொள்ளுங்கள்.

**செயற்படுவோம்**



**ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.**

தொடக்க நூல் 2:15

கடவுள் மனிதனை (ஆணையும் பெண்ணையும்) உண்டாக்கிய பின்பு அவர்கள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்குத் தேவையான சூழலை ஏதேன் தோட்டத்தில் உருவாக்கிக் கொடுத்தார்

அத்தோடு அவர்களுக்கு ஒரு பொறுப்பையும் கொடுத்ததாக தொடக்கநூல் 2:15 இல் நாம் வாசிக்கின்றோம். நிலத்தைப் பண்படுத்துவதும் பாதுகாப்பதுமே அந்த பொறுப்பு இவ்வுலகில் வாழும் நம் அனைவருக்கும் உரித்தாகின்றது.

*மனனவசனம்:*

*தொடக்கநூல் 1:27*

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

செயற்பாடு

1. சூழல் அழிவுக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 5 எழுதுக.

2. அவ்வழிவுகள் ஒவ்வொன்றையும் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்வைக்கவும்.